# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்பும் செயலுக்கு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 23 இதழ் 142
யாழ்ப்பாணம் புதன்கிழமை 07 — 07 — 1993

## பலத்த கண்டனம்

(சென்னை) தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்தியா மேற்கொண்டுள்ள முடிவை இந்தியாவிலுள்ள தொண்டர் (4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் படகுகளுக்கு இந்தியப் படை பாதுகாப்பு

(சென்னை) இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு அழைத்துவரப்படும் இலங்கை அகதிகள் படகுகளுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பு வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## உதவி நிறுவனங்கள் தடை விரைவில் மறுபரிசீலனை

(சென்னை) இலங்கை அகதிகள் தங்கியிருக்கும் அகதி முகாம்களுக்கு அரசு சார்பற்ற நிறுவனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மறுபரிசீலனை செய்ய தமிழக அரசு (4-ம் பக்கம் பார்க்க)

### ★ கிழக்கு மாகாணத்தில்

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்த

# திருமலை-மட்டு நிலைசீராக இல்லை

## படை அதிகாரிகள் தெரிவுக்குழுவுக்கு தகவல்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சின்படி வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் நடத்த நிலைமை சீராகஇல்லை என்று முப்படை அதிகாரிகள் தெரிவுக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் விதத்தில் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் சீர் செய்ய இறுது காலம் பிடிக்கும் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூன்று மாதத்துக்கும் ஐந்து மாதத்துக்கும் இடைப்பட்ட ஒரு கால இடை (4-ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் பாதுகாப்பிலுள்ள

## யுத்தக் கைதிகள் குறித்து நாடாளுமன்றில் கேள்வி!

(கொழும்பு) விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள ஏனைய யுத்தக் கைதிகளின் விடுதலை குறித்தும் றுகுணு கப்பலில் வந்த பொருட்களை விடுதலைப் புலிகள் அபகரித்துள்ளனரா என்பது குறித்தும் நேற்று நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா இது தொடர்பான கேள்விகளை எழுப்பினார். இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலுள்ள மிகுதி யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேலும் முயற்சிகளை (4-ம்பக்கம் பார்க்க)

### யாழ். நகரில் கைதிகளின்

## உறவினர் தங்கியிருப்பதால் அரசுக்கு பெரும் நெருக்கடி

(கொழும்பு) விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இவர்களை கொழும்புக்கு அழைத்துக்கொள்வதில் அரசாங்கம் பிரமாதமாக ஒன்றும் செய்யமுடியாது. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் கோரிக்கையின் பேரிலேயே கொழும்புக்கு அழைத்துச் செல்லமுடியும்.

எனினும் இவர்கள் கொழும்பு வரமுடியாது எனவும் யுத்தக் கைதிகளுடனேயே கொழும்பு திரும்ப முடியும் எனவும் பிடிவாதம் பிடித்துவருவது அரசாங்கத்தை ஒரு இக்கட்டான நிலைக்குத்தள்ளியுள் (4-ம் பக்கம் பார்க்க)

### சிங்களக் கைதிகள் விவகாரம்:

## உடன்பாடு முறிவதற்கு செஞ்சிலுவை காரணமாம்

(லண்டன்) யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள சிங்கள கைதிகளின் பரிமாற்றம் பற்றிய உடன்பாடு முறிந்துபோனதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணமென்று கொழும்பில் அரச சார்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

முன்னர் இக்கைதிகளைக் காண உறவினர் யாழ். வந்தபோதும் கைதிகளுக்கு மாற்றீடாக பொருளாதாரத் தடை நீக்கப்பட்டபோதும் இப்பத்திரிகைகள் பெரிதுபடுத்தி செய்தி (4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட மோதலில் 6 புலிகள் வீரச்சாவு

(மட்டுநகர்) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காஞ்சிரங்காடு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் ஆறு விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (4-ம் பக்கம் பார்க்க)

## இரு வேறு மோதலில் 2 போராளிகள் வீரச்சாவு

(மட்டுநகர்) மட்டு. மாவட்டத்தில் கடந்த 3ம் திகதி இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்றமோதலில் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

இராணுவத்தினர் பதுங்கி (4ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் கால் இழந்தார்

(யாழ்ப்பாணம்) பொன்னாலை கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற இடம்பெயர்ந்த இளைஞர் ஒருவர் கடலில் மிதந்துவந்த மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளார்.

நேற்று அதிகாலை பொன்னாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் ஒருவரே இச்சம்பவத்தில் தனது காலை இழந்துள்ளார்.

இதேவேளை நேற்று அதிகாலை யாழ். குடா கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஒருவர் காயமடைந்தார். (ரி)

### வெட்டுப் புள்ளி பாரபட்சம்:

## பாதிக்கப்பட்ட மாணவர் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்) 1991ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சை வெட்டுப்புள்ளியில் பாரபட்சம் காட்டப்பட்டதை அடுத்து தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு இதுவரை நடைமுறைப்படுத்தாததால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நடவடிக்கைக் குழுவுக்கு ஊடாக சட்ட நடவடிக்கை (4-ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.வுக்கு காமினி கட்சி ஆதரவு வழங்கும்?

(கொழும்பு) ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என ஜனநாயக ஐக்கிய முன்னணித் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய டிசைன்களில் கண்ணுக்கு மெருகூட்டும் நவீன ரகப் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 15% தள்ளுபடி. உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள். 16 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3229)

### தேவை

நியூரறி மேசை, வாங்கு, புதிய பெற்றோமாக்ஸ், புதிய பெண்கள் துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு வைத்திருப்போர் 12-07-93ற்கு முன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. கி-287, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (கி-287)

### மணமகன் தேவை

யாழ் இந்து சமயத்தைச் சேர்ந்த 37 வயதுடைய பட்டதாரி ஆசிரியையான தமது சகோதரிக்கு 42 வயதிற்கு உட்பட்ட மணமகனை அவரது சகோதரர்கள் தேடுகின்றார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முதற் கடிதத்திலேயே முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 280 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் (கி280)

### மணமகள் தேவை

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரி B. Sc. Second class Honours தற்பொழுது அவுஸ்திரேலியாவில் (Victoria University) Post Graduate course in Business computing பயிலும் மகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை தேடுகின்றனர். பிறந்த திகதி June 1963 உயரம் 5' 7'', Complexion fair, நட்சத்திரம் திருவோணம், செவ்வாய் தோஷமில்லை. பட்டதாரி விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. கி - 283, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (கி-283)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 252)


## சொற்பொழிவு

(அரியாலை)

சரவெட்டி மத்தி தச்சன் தோப்பு விநாயகர் ஆலய வருடாந்த திருவிழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. விநாயகமூர்த்தி சமய சொற்பொழிவாற்றினார். (59

## பயிற்சி வகுப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புலோலி ஆகிய மூன்று கொத்தணிகளின் பாடசாலைகளிலும் ஆண்டு ஒன்றில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று 7ம் திகதி வட-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (52)

# திருநெல்வேலி
# தலங்காவில் பிள்ளையார் கோவில் ரதோ[...]
## ★ சிறப்பு மலர் (07-07-1993) ★

# அபயம் அளிக்கும் தலங்காவலன்

சைவமும் தமிழும் வளர்ந்த புண்ணிய பூமி திருநெல்வேலி கிராமம் ஆகும். இங்கு வாழும் மக்களுக்குள் அனேகம் பேர்கள் சைவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் இங்கு அனேக இந்து ஆலயங்கள் மூலை முடுக்குகளிலும் அமைந்து காணப்படுகின்றது. அவற்றில் மிகவும் பழமை வாய்ந்தது தலங்காவற் பிள்ளையார் ஆலயமாகும்.

பரராஜசேகரமன்னன் நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆட்சிசெய்த காலத்தில் நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தை அமைத்து அதற்கு காவலாக நான்கு திசைகளிலும் நான்கு பிள்ளையார் ஆலயங்களை அமைத்து வழிபட்டதாக வரலாறு கூறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்கு திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயமும், தெற்கு நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயமும், கிழக்கு நாயன்மார்கட்டு வெய்யில் உவந்த பிள்ளையார் ஆலயமும், வடக்கு நல்லூர் சந்திரசேகரபிள்ளையார் ஆலயமும் ஆகும்.


தலங்காவல் பிள்ளையார் தன்னை நம்பி மனமுருகி வழிபடுவோர்களை என்றும் கைவிட்டது இல்லை. தலங்காவலன ஒன்பது நவக்கிரகங்களில் இராகு, கேது ஆகிய இரு கிரகங்களை தனது இடுப்பில் கட்டிவைத்து இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ராகு, கேது தோஷமுள்ளவர்கள் தலங்காவலனுக்கு நேர்த்திக்கடன் வைத்து அர்ச்சனை அபிஷேகம்செய்து வணங்கி வருகிறார்கள்.

சிவஸ்ரீ நா சண்முகரத்தின குருக்கள் தனது புதல்வர்களோடு இவ் ஆலயத்தை நிர்வகித்து வருகின்றார். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை இப்பகுதி சைவப் பெரியார்கள் அளித்து வருகின்றார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க பெரியார் திருநெல்வேலி கிழக்கு பகுதியை சேர்ந்த அமரர் க. சுப்பிரமணியம் (மணியண்ணை) என்பவராகும். ஆலயம் படிப்படியாக வளர்ந்து பல கட்டிடங்கள் கொண்ட முழு ஆலயமாக விளங்குகின்றது.

இயக்கியிலேயே உவர் தன்மையாக இருந்த ஆலய கிணற்று நீர் புதிய வெள்ளோட்டத்திற்கு பின்பு நன்[...]

[...] வீரகா[...] த்தை [...] வில் மற[...] படி [...] புதி[...] கொண்[...]

(4-ம் [...]



1942ம் ஆண்டு இவ்வாலயத்துக்கு புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றது.

## தலங்காவலன்

நலம்விளங்க அடியார்கள் நன்மை யெய்த
நாடோறும் அருளளிக்கும் நாதனாகி
இலங்குசைவ மரபோங்கி எம்மைக் காக்க
இனிதுதிரு நெல்வேலி யெனுமூர் வைகி
வலம்கிளரும் வரங்களெல்லாம் மக்கு மாறு
வணங்குமவர்க் களித்தருள வல்லானாகி
தலங்காவற் பிள்ளையார் எனும்பேர் பூண்ட
தற்பரனின் தாளிணையெம் தலைமேற் கொள்வாம்.

மலர் ஆக்கம்:
என். இராமச்சந்திரன்
(பத்திரிகையாளர்)

# அற்புத சக்திக[...]
# நிறைந்த விநா[...]

ஓங்கார பிரணவசொரூபியாகிய விநாயகப் பெருமான் அற்புத சக்திகள் நிறைந்த கடவுள். எல்லோர்க்கும் எந்நேரமும் அருள் பாலிப்பவர். அவரை வழிபடுபவர்கள் பெரும்பேறுகள் பலவற்றைப் பெறுவர். இதனால் நம் ஈழவளநாட்டில் எங்கு நோக்கினும் பிள்ளையா[...] காண்கின்[...] திருநெல்[...] பிள்ளையா[...] பெற்றவர்[...] அனைத்து[...] ளிச் கொ[...] இவரைத் [...] வெகுதொ[...]

(4-ம் [...]

## பிள்ளையார் சுழி

பிரணவத்தின் சொரூபமானவன் [...] பதைத் துதிக்கை வெளிப்படுத்துகி[...] விந்து, அகரம், உகரம், மகரமாகிய [...] களையும் கொண்டது பிரணவம். முத[...] தண்டவடிவமானது அடுத்த விந்து. [...] னது. இவ்விரு உறுப்புகளும் சேர்[...] சுழி (உ). இது நாதவிந்துக்களின் [...] பகனின் துதிக்கையே நாதவிந்து [...] எழுத்துக்கள் விநாயகனின் முகத்தில[...] லேயே எதைத்தொடங்கும் போதும் [...] முதலில் வணங்குவதுடன் எதனையும் [...] கும் போதும் பிள்ளையார் சுழி போட்[...] மரபாகிவிட்டது. கணபதி பூசை [...] இது அழைக்கப்படலாயிற்று.


## இன்று தேர் ஏறி வரும் விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்

நம்பிக்கை! நாணயம்!
ஆங்கில மருந்துகள் விற்பனையில் முன்னோடிகள்
**பரணி மருந்துச்சாலை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான
பலசரக்குப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள
**யோகு ரேடிங் அன் கம்பனி**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நம்பிக்கை நாணயம் குறைந்தவிலை
நகை உலகில் சீதா
22 கரட் தங்க வைர நகைகளுக்கு
எப்பொழுதும் ஞாபகம் இருக்கட்டும்
**சீதா நகை மாளிகை**
22-A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

சுத்தமான சைவ உணவுகளுக்கு
விஜயம் செய்யுங்கள்
**கண்ணன் லொட்ஜ்**
6 வளாக சந்தி, திருநெல்வேலி.

உங்களுக்குத் தேவையான
ஆங்கில மருந்துகளை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள!
**எஸ். ரி. மருந்தகம்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள்
இந்திய சஞ்சிகைகள் இலங்கை
எழுத்தாளர்களின் படைப்புகள்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
**மக்மிலன் புத்தகசாலை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்களை[...]
பெற்றுக்கொள்ள விஜயம் [...]
**சுரேகா புத்தக கள[...]**
25, பஸ்நிலையம், யா[...]

பிஸ்கட் வகைகள், இனி[...]
பாமர வகைக[...]
மொத்தமாகவும் சில்ல[...]
பெற்றுக்கொள்ள[...]
**விஜயா வர்த்தக [...]**
64, ஆஸ்பத்திரி வீதி, யா[...]

உங்களுக்குத் தேவை[...]
பலசரக்குப் பொருட்[...]
மலிவாகப் பெற்றுக்கொ[...]
**ஸ்ரீ அம்பா[...]**
**பலசரக்கு மா[...]**
பலாலி வீதி, திருநெல்[...]

பலசரக்கு சாமான்கள்,
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள[...]
இன்றே விஜயம் செய்யுங்கள்!
**ரூபன் களஞ்சியம்** (பலசரக்கு மாளிகை)
இல. 09, திருநெல்வேலி சந்தை (உட்புறம்)

மணிவாக்கு

"தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும்"

— பிரையண்ட்.

## நமது நோக்கு

### சிக்காகோ மாநாடு

1893- அமெரிக்க நகரான சிக்காகோவில், கொலம்பஸ் மண்டபத்தில், சர்வமத மாநாடு நடைபெற்றது. சுவாமி விவேகானந்தர் அங்கு ஆற்றிய உரை பலர் கண்களைத் திறந்தது. இந்து சமயம் பற்றி உலகம் நன்கறிந்திட வழிவகுத்தது.

1993— அதே சிக்காகோ நகரில், உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை அமைப்பு சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தி உள்ளதாக அறிய வருகிறோம்.

எழுபத்தைந்து நாடுகளில் வசிக்கும் ஏழு கோடித் தமிழர்களின் நிலைபற்றி இங்கு ஆராயப்பட்டிருக்கின்றது.

நல்ல முன் முயற்சி! பரந்துபட்டு வாழும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் முயற்சி! இலங்கைத் தமிழர்கள் படும் துயரம் பற்றியும் இங்கு ஆராயப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர்களை ஏனைய தமிழர்கள் கைவிட்டு விட்டார்களோ என்று எண்ண முற்படும் இவ்வேளையில் இச்செய்தி வந்தது பெரும் ஆறுதல்!

தன்மானத்தோடும் உரிமைகளோடும் வாழ வேண்டும் என நினைக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இத்தனை துயரங்களா?

இராணுவக் கெடுபிடிகளும், பொருளாதாரத் தடைகளும், அரச குடியேற்றங்களும் தரும் வேதனைகள் எழுத்தில் அடங்குமா? எமது பிரச்சினைகள், எமக்கு நடக்கும் அநியாயங்கள் வெளி உலகத்தவரும் அறிய வாய்ப்பேற்படும் என்ற நம்பிக்கையில் இத்தகைய மாநாடுகளை வரவேற்கிறோம்.

வெளிநாடுகளில் வசிக்கும் ஈழத்தமிழர்கள் அனைவருமே நாட்டுப்பற்றோடு தான் வாழ்கிறார்கள் என்று எவரும் அறுதியிட்டுக் கூற முடியாது.

சிலர் சுயநலத்தோடு செய்யும் சில கருமங்கள் எமது இனத்திற்கு களங்கம் கற்பிக்கின்றது என்பதையும் வேதனையோடு கூறவேண்டும்.

இந்தப்பின்னணியில், எமது துன்பதுயரங்களை வெளிநாட்டுப் பொது ஸ்தாபனங்களுக்கு விளக்கி அவைமூலம் அரசியல் தலைவர்களுடைய அனுதாபத்தைப் பெற்றுவிட எடுக்கும் எந்த முயற்சியும் வரவேற்கத்தக்கதே.

இலங்கை அரசிற்குப் பிரசார சாதனங்கள் ஏராளம். வானொலி, தொலைக்காட்சி, அரசு சார்பான பத்திரிகைகள், வெளிநாட்டுத் தூதரகத்தில் உள்ள தகவல் நிலையங்கள் போன்றவை மூலம், பிரச்சனைகளை மூடி மறைக்கவோ, திரிபுபடுத்தவோ வசதிகள் உண்டு.

எனவே, தமிழர்கள் பற்றிய தவறான பிரசாரங்களை முறியடித்து இனப்பிரச்னையின் உண்மைநிலை விளக்கி, அமைதிக்கான தீர்வு கிடைக்க, வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் மேலும் உதவுவார்கள் என எதிர்பார்க்கிறோம்!

சனசமூகநிலைய சமாஜம்

## கலை இலக்கிய விளையாட்டு போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் தனது அங்கத்துவ சனசமூக நிலைய விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விளையாட்டுப்போட்டிகளையும், கலை இலக்கியப் போட்டிகளையும் நடாத்தவுள்ளது.

07 பேர்கொண்ட 12பந்துப் பரிமாற்றங்களையுடைய மென்பந்து எறிபந்தாட்டம் 06பேர் கொண்ட (ஓவர் கேம்) கரபந்தாட்டம் 07 பேர்கொண்ட 19 வயதுக்குட்பட்ட (01-06-73ன் பின் பிறந்தோர்) வீரர்களுக்கான உதைபந்தாட்டம் 06 பேர் கொண்ட தாச்சி, 16 பேர்கொண்ட "எல்லே" ஆகிய விளையாட்டுப் போட்டிகள் ஆண்களுக்காகவும் 07பேர் கொண்ட வலைப்பந்தாட்டம் பெண்களுக்காகவும் நடாத்தப்படவுள்ளன.

கலை இலக்கியப் போட்டிகளாக சிறுகதை கவிதை, ஓவியம், கட்டுரை, பேச்சு, பொது அறிவு முதலானவைகளும் நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் அனைத்துக்கும் முடிவு திகதி 28-07-93 ஆகும். மேலதிக விபரங்களை நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசாரமண்டபத்தில் அமைந்திருக்கும் சமாசப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (101)

## இராசி பலன்

07-07-1993

புதன்கிழமை

(தமிழுக்கு ஆனி 23)

திதியை காலை 7-26 வரை, அஸ்டம் பி. இ 2-18 வரை இராகுகாலம் காலை 11-58 முதல் 1-25 வரை, சுபநேரம் மாலை 4-28 முதல் 5-58 வரை.

மேஷம்- தடைநிவர்த்தி, உறவினர் ஆதரவு, பயணம்.

இடபம்: மனவேதனை குறையும், காரிய பலிதம், பண உதவி.

மிதுனம்: சிறிது குழப்பம், கருத்துவேறுபாடு, அலைச்சல்.

கடகம்: வருவாய் பாதிப்பு, நிதானம் தவறுதல், செலவு.

சிங்கம்: குடும்ப மனக்கசப்பு காரியத்தடை, உடல்ரோகம்.

கன்னி: பெரிய மனிதர் நட்பு, பிறர் உதவி, உல்லாசம்.

துலாம்: தொழில் ஏமாற்றம், நண்பர் பகை, மனக்கசப்பு.

விருச்சிகம்: குடும்ப பிரிவு, மன அடக்கம், தனிமைப்படல்.

தனுசு: கடுமையான முயற்சி, மக்கள் நன்மை, புதிய திட்டம்.

மகரம்; அவமதிப்பு, வழித்தொல்லை, அகால உணவு.

கும்பம்: காலதாமதமான வெற்றி, தொழில் லாபம், பிறர் உபதேசம்.

மீனம்: நோய் உபாதை, முறுத்து பேசுதல், பிறர் சம்மப்பாடு

ஜோதிடர்

## 8969 பேருக்கு சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழைஅரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் கடந்த யூன் மாதம் 8969 நோயாளருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. (72)

## இன்று

(அரியாலை)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு ஷேக்ஸ்பியரின் சரித்திர நாடகமான "ஜூலியஸ் சீஷர்" என்ற நாடகமே மேடையேறவுள்ளது. (59)

0 0 0

(அரியாலை)

வேலணை சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் பெற்றோர் தினத்தையொட்டி நடைபெறும் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (59)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்பபாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சவேரியார் (ஓ. எல். ஆர்.) வித்தியாலயம் எடுக்கும் முத்தமிழ் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

(ம)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஜனசவிய சம்பந்தமான ஆலோசனைக் கருத்தரங்குக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கரவெட்டி உதவி அரச அதிபர் பணிமனையிலும், 11 மணிக்கு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பணிமனையிலும் நடைபெறும்.

பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார். (162-இ)

கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட

## லொத்தர்ச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1-ம் | பரிசு | டிக்கற் இலக்கம் | 634 |
| 2-ம் | பரிசு | டிக்கற் இலக்கம் | 370 |
| 3-ம் | பரிசு | டிக்கற் இலக்கம் | 82 |
| 4-ம் | பரிசு | டிக்கற் இலக்கம் | 1106 |
| 5-ம் | பரிசு | டிக்கற் இலக்கம் | 562 |

நா. வே. தம்பியப்பா

கௌரவ செயலாளர்

15-07-93ற்கு முன்னதாக பரிசு பெற்றவர்கள் தங்கள் பரிசில்களை நிலையத்தில் பெற்றுக் கொள்ளவும். (கி-285)




(ஏ 3204)

# கிணற்றில் தவறி வீழ்ந்த மாணவன் பரிதாப மரணம்

(நெல்லியடி)

குளிப்பதற்கு கிணற்றில் தண்ணீர் அள்ளியபாடசாலை சிறுவனொருவன், தவறிவீழ்ந்து பரிதாபமாக மரணமானான்.

இச்சம்பவம் நடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை ஊறணி வீதியிலிருந்து வீதியில் இடம்பெற்றது. மரணமான மாணவன், மகேந்திரன் குமார்-குமார் (வயது-07) என்னும் சிறுவனாவான்.

இது சம்பந்தமான விசாரணையை மேற்கொண்ட உடுப்பிட்டிப்பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ப. நடராசா விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (160-தி)

## நடைமுறை தமிழ் வழிகாட்டி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நடைமுறை தமிழ் வழிகாட்டி அகரவகை நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மாலை 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நூலை வெளியீட்டு வைக்க கவிஞர் இ. முருகையன் மதிப்புரையையும், பேராசிரியர்கள் நா. பாலகிருஷ்ணன், கா. சிவத்தம்பி, திரு. க. சொக்கலிங்கம், வீ. பரந்தாமன் ஆகியோர் கருத்துரைகளும் வழங்குவார்கள் (ரி)

## மரண அறிவித்தல்

### குமாரு மேரிதிரேசா (அலின்)

கரம்பன் தெற்கை பிறப்பிடமாக கொண்டவரும் தற்சமயம் கொழும்பில் வசிப்பவருமான குமாரு மேரிதிரேசா 05-07-93 அன்று கொழும்பில் காலமானார். இவர் பொன்னம்பலம் குமாருவின் அன்பு மனைவியும், ஜெஜேந்திரன் (ஜேர்மனி), மனோகரன் (யாழ்ப்பாணம்), மகிந்தன் (சீதேவி என்டர்பிறைஸ்-கொழும்பு), மதிவாணன் (ஜேர்மனி), கலைவாணன் (கல்கிஸ்ஸை), சுபாசினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு தாயாரும், வீரலக்சுமி, கனகேஸ்வரி, தவராணி, தயாவதி ஆகியோரின் அன்பு மாமியும், சிறிசரன் (ஜேர்மனி), சிறிலதா, சிறிநிதி, சாரங்கன், சங்கீதா, சுதர்ஷன், நிசாந்தன் வேளானந்த், வேளாயினி, தாயாஸ்காந் ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 06-07-93 அன்று கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

இல. 210, K. K. S. வீதி,
முட்டாஸ் சந்தி,
யாழ்ப்பாணம். (கி-293)

### மரியதாஸ் சந்திரமலர்

மூன்னாள் கோண்டாவில் இராமகிருஷ்ண கல்லூரி ஆசிரியை எம். மரியதாசின் அன்பு மனைவி திருமதி சந்திரமலர் 04-07-1993 ஞாயிற்றுக்கிழமை அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார். அன்னார் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைசிங்கம் கமலாவதி தம்பதிகளின் அன்பு மகளும் ரஞ்சிதமலர் (ராசாத்தி) (மலேசியா), சத்தியபாலன் (துரை) கோண்டாவில், அருணைமலர் (விஜயா) (ஜேர்மனி), சத்தியதாசன் (இவம்) (கனடா), சத்தியலிங்கம் (பாபு) (பாபு எலெக்ரோனிக் வர்த்தக நிலையம்-திருநெல்வேலி) திவ்வியமலர் (நளினி) (கனடா), சத்தியசுபரன் (ரகு) (ஜேர்மனி), நவமலர் (பவானி), சதீஸ்வரன் (ராஜீ) (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீசரன் (மலேசியா) யோகேஸ்வரி (பவா) கமலநாதன் (ஜேர்மனி), விஜேயா (கனடா) கடம்பமலர் (நயினாதீவு), துளசிகாதேவி (கோண்டாவில்), கலைகாந்தன் (பவானி றேட்ஸ் சென்ரர் சுன்னாகம்), ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகுணு, பழுணு, முரளி, ரூபன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு சின்னம்மாவும் கார்த்திகா, கௌரி, கௌதமன், இருத்திராகரன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் விஜே, ராஜா, சுகு, தீபன், சபீ, நிருஜா, கோபிதா லபிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் லீலாவதி, பத்மாவதி, சரஸ்வதி, பூபதி, புஸ்பவதி ஆகியோரின் பெருமகளும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியை வி 05-07-1993 (திங்கட்கிழமை) அன்று வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்: ரி. பாபு

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (கி-191)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B

### இரு வேறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து தாக்குதல் நடத்த முற்பட்டவேளையில் விடுதலைப் புலிகள் பதில் தாக்குதலைத் தொடுத்தனர். இச்சம்பவத்தில் 2ம் லெவ். வேல்நாயகம் அல்லது சித்திரன் (தந்தையர் சித்திரன் வீரமுனை) என்பவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை கடந்த மாதம் 27ம் திகதியன்று மட்டு மகிழவெட்டுவானில் தேசத்துரோகிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 2ம் லெப். ரகுபரநாத் அல்லது மதன் (டேவிட் அன்ரனி மட்டு. ஆறுமுகத்தான் குடியிருப்பு) என்பவர் வீரச்சாவைத்தழுவிக்கொண்டார்.

இவர்களுக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

### அற்புத சக்திகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து தரிசிப்பர்.

தலங்காவதி பிள்ளையாரைத் தம் குலதெய்வமாகக் கொண்டவர்களின் செயற்பாடுகள் தெய்வத்திருநலம் பெற்றவையாக என்றும் உள்ளன.

இதனால் திருநெல்வேலியைச் சாராத மக்கள் கூட அத்தெய்வீக விநாயகரின் திருவருளைப் பெற்றுச் சிறப்படைந்துள்ளனர்.

சிவபெருமானின் மூத்த குமாரன் என்பதைக் குறிக்கும் "காயாரோகண மூத்த நயினார்" கோயில் என இத்தலத்திற்கு மற்றோர் பெயர் இருப்பது முழுமுதற் கடவுளாகிய சிவபரம்பொருளே என்பதைக் குறிப்பதாகும். இதனால் சிவபெருமானை வழிபடுபவர் பெறும் பேறுகள் அனைத்தையும் இவர் நல்குகின்றார் என்பதை அனுபவத்திலே காணலாம்.

நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறும் இவ்வாலயம் எல்லா வகையான சிறப்புக்களோடும் திகழ்கின்றது.

—சித்தா ஸனாநிதி
க. கணபதிப்பிள்ளைசிவம்

### கிழக்கு மாகாணத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்குள் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்காக கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமைகளை சீர் செய்து தரமுடியும் என பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் சீராக இருப்பதாக முப்படைத் தலைவர்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழு முன் தெரிவித்தனர்.

எனினும் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளின் பாதுகாப்பு நிலைமைகளில் இன்னும் எதுவித முன்னேற்றமும் இல்லையெனவும், அங்கே நிலைமைகள் பழையபடியே உள்ளதாகவும் முப்படைத் தலைவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கூறியுள்ளதாக தகவல் தெரிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான ஆயத்த வேலைகளை ஆரம்பிப்பதற்காக அங்குள்ள பாதுகாப்புநிலைமைகளை அறிந்து கொள்ளும் விதமாக நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் சமூகமளிக்க பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று வரவழைக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தை வடக்குடன் நிரந்தரமாக இணைப்பதற்கு கூடிய விரைவில் அங்குள்ள மக்களின் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளும் நோக்குடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஏதகனவே சிபாரிசு செய்திருப்பது தெரிந்ததே. (இ-ரி)

### யாழ். நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையில் இந்த நிலை அகதிகளுக்கு எந்தவித மான பாதிப்பையும் ஏற்படுத்தாது. எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### அபயம் அளிக்கும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக இப்பகுதி சைவ அடியார்களின் தாராளமான பொருள் உதவியோடும் ஒத்துழைப்போடும் 1988ம் ஆண்டு ஆனிமாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக விநாயகப் பெருமானது திருவருள் துணையினால் மகாகும்பாபிஷேகம் இனிது நடைபெற்று முடிந்தது.

நாட்டில் அமைதியும், சமாதானமும் தோன்றி தமிழ் மக்கள் வாழ்வில் விடிவு ஏற்படவேண்டும் என்று நாம் எல்லோரும் இன்று தேர் ஏறி வீதி வலம் வரும் அடியார்கள் குறைதீர்க்கும் அற்புத விநாயகன் தலங்காவலனை தேர் வடம் பிடித்து இழுத்து மனம் உருகி கேட்போமாக. வணங்குவோமாக விநாயகர் சரணம்.

என். இராமச்சந்திரன்
(பத்திரிகையாளர்)

### ஈழ அகதிகளைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதேவேளையில் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை இந்தியா நிறுத்த வேண்டும் எனவும் மேற்படி ஸ்தாபனங்கள் இந்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கவுள்ளன.

தமிழகத்திலிருந்து அகதிகளை இந்தியா பலவந்தமாகத் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக தாம் இந்தியா முழுவதும் பிரசார நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கென பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் தாம் பெறப் போவதாகவும் தொண்டர் ஸ்தாபனங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி முதல் தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டம்கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்திய அரசு முடிவெடுத்திருப்பது தெரிந்ததே. (இ-ரி)

### மட்டு. மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலை பத்து மணியளவில் காஞ்சிரங்காடு நோக்கி சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர் இச்சம்பவத்தின் போது புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன. இம்மோதலில் படையினர் தரப்பில் பலத்த இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது.

இம்மோதலின்போது லெப். செந்தில் (வேலுப்பிள்ளை செல்வம் மொறக்கொட்டாஞ்சேனை), லெப். சதீஸ்வரன் அல்லது நிலவன் (சிவானந்தன் கருணாநாதன் மட்டு. ஊறணிக்சேனை) 2-ம் லெப். விஜயநாதன் அல்லது விஜி (முத்துவேல் மோகநாதன் சந்திவெளி), 2-ம் லெப். உமாரமணன் அல்லது லோகிதன் (சின்னத்தம்பி பூபாலபிள்ளை பெண்டுகல்சேனை), 2-ம் லெப். சிவனேந்திரன் அல்லது பிரதீபன் (விஜரத்தினம் ரமேஸ்குமார், களுவடி), வீரவேங்கை பாலசிங்கம் அல்லது சௌந்தரராஜன் (மகாலிங்கம் யோகராசா வாழைச்சேனை) ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். இவ்வீரவேங்கைகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

### வெட்டுப் புள்ளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கையொப்பங்கள் அடங்கிய முறைப்பாடு ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கு செவிசாய்க்காத பட்சத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (தி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துவருகிறது என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் வடபகுதிக்குப் பொருட்களை எடுத்துச் செல்ல எந்த ஒரு கப்பலையும் விடுதலைப் புலிகள் தடுத்து வைக்கவோ அல்லது அரசுக்குச் சொந்தமான எந்த ஒரு கப்பலையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றவோ இல்லை என்றும் அவர் கூறினார். (ரி)

### அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்குநீரிணையின் 20 மைல் கடற்பரப்பில் இலங்கை இராணுவமும் தமிழ் போராளிகளும் நடமாடுவதினாலேயே இப்படி பாதுகாப்பு வழங்க ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யு. என். எச். சி. ஆர். உதவியுடன் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி முதல், வாரத்தில் 4 தடவையாக அகதிகளை ஏற்றிய படகுகள் புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே-ரி)

### உதவி நிறுவனங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்துள்ளது.

இலங்கை அகதிகள் பலவந்தமாக நாடு கடத்தப்படுவதாகவும் அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் அவர்களை சென்று பார்க்க தங்களுக்கு விதித்துள்ள தடைகளை அகற்றுமாறும் தொண்டர் ஸ்தாபனங்கள் தமிழக அரசையும் மத்திய அரசையும் வற்புறுத்தி வந்ததை அடுத்து தமிழக அரசு மீள தனது தடையை பரிசீலிக்கவுள்ளது. (கே-ரி)

### ஐதேக வுக்கு

(1-ம் பக்கம் பார்க்க)

தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளதை அடுத்தே சம்பந்தப்பட்ட இரு கட்சிகளும் இணைந்துகொள்வதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் ஐ. ஐ. தே. முன்னணியையும் சேர்த்துக்கொள்ள ஆலோசித்திருப்பதாக கட்சியின் பொதுச் செயலர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திராவும் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

### சிங்களக் கைதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை வெளியிட்டு வந்தன.

பின்னர் கைதிகள் பரிமாற்ற உடன்பாடு முறிந்ததும் அது பற்றிய செய்திகள் வெளியிடாமல் இருந்துவிட்டன.

தற்போது அரசால் நடாத்தப்படும் நாளேடுகள் உடன்பாடு உடைந்ததற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணம் என்று குறைகூறுவதாக பி. பி. சி. யில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கைதிகளை அழைத்துச் செல்ல யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும் கைதிகளின் உறவினர்கள் தங்களின் பிள்ளைகள் ஏதாவது உடன்பாடு ஏற்பட்டு விடுவிக்கப்படும்வரை யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்கப்போவதாக கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே-ரி)